# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூலை 10, 2021 Weekly E-paper • July 10, 2021




# மாற்றம் முன்னேற்றம் லியோனி!

● சுப. வீரபாண்டியன்




## அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி தர்மம்

சிற்பி செல்வராசு



## பெட்ரோல் டீசல் எரிவாயு - மோடியால் மக்கள் படும்பாடு!

சாரதாதேவி



## தொடரும் வஞ்சக வரலாறு!

மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூலை 10, 2021 Weekly E-paper • July 10, 2021


# மாற்றம் முன்னேற்றம் லியோனி!

சுப. வீரபாண்டியன்



ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சமூக வலைத்தளங்களில் ஒரு செய்தியைப் படித்ததும், அதிர்ச்சியடைந்து நண்பர் லியோனி எண்ணுக்குத் தொலைபேசி செய்தேன். ஒரு சாலை விபத்தில் லியோனி இறந்துவிட்டார் என்பதே அந்தச் செய்தி. அந்தத் தொலைபேசியை யார் எடுக்கப்போகின்றாரோ என்ற கவலையோடுதான் தொலைபேசினேன். இன்ப அதிர்ச்சியாக அவரே பேசினார்.

"திட்டமிட்டுச் சிலர் கிளப்பியுள்ள வதந்தி அது" என்றார். "அப்படியா, உங்கள் மீது யாருக்கு அவ்வளவு கோபம்? ஏன் இந்த வதந்தி?" என்று கேட்டேன். "நேற்று திருவண்ணாமலையில் ஒரு கூட்டத்தில் பேசினேன். அதிலிருந்து இந்த வதந்தி சமூக வலைத்தளங்களில் உலா வருகிறது" என்றார்.

திருவண்ணாமலையில் நண்பர் லியோனி என்ன பேசினார்?

2016 தேர்தல் நேரம் அது! அந்தத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டது. மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்களை, அக்கட்சி, முதல்வர் வேட்பாளராக அறிவித்திருந்தது. 234 இடங்களிலும் அக்கட்சி தனித்துப் போட்டியிட்டது. அன்புமணி பென்னாகரம் தொகுதியில் போட்டியிட்டார். எனினும் தேர்தல் முடிவுகள் அவர்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை. ஓரிடத்தில் கூட அக்கட்சி வெற்றி பெறவில்லை என்பதோடு, முதல்வர் வேட்பாளரான அன்புமணியே, பென்னாகரம் தொகுதியில், திமுக வேட்பாளரிடம், 18446 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.




அந்தத் தேர்தலின்போது, தமிழ்நாடு எங்கும் அக்கட்சியின் சார்பில் ஒரு சுவரொட்டி ஒட்டப்பட்டது. அவர் படத்தைப் போட்டு, "மாற்றம், முன்னேற்றம், டாக்டர் அன்புமணி" என்று அச்சிடப்பட்டிருந்தது. அந்தச் சுவரொட்டியின் வடிவமைப்பும், சொல்லமைப்பும் கவரத்தக்க வகையில் இருந்ததால், அது குறித்துப் பரவலாக ஒரு பேச்சு இருந்தது.

திருவண்ணாமலை தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், திமுக வேட்பாளரை ஆதரித்துப் பேசிய லியோனி, அந்தச் சுவரொட்டி பற்றியும் பேசினார். அவர் பேச்சின் சாரம் இதுதான்: "வர வழியில ரெண்டு சுவரொட்டிகள பாத்தேன். ஒன்னுல, மாற்றம், முன்னேற்றம், டாக்டர் அன்புமணின்னு இருந்துது. இன்னொன்னு, அதுக்குப் பக்கத்துல ஒட்டியிருந்தாங்க. "மூலம், பௌத்ரம், ஆண்மைக்குறைவு"ன்னு இருந்துது. ரெண்டுக்கும் ஒரே டாக்டரா, இல்ல, வேற வேறயான்னு தெரியல"

அன்று மாலையிலிருந்து அவருக்கு மிரட்டல் மற்றும் ஆபாசத் தொலைபேசிகள் வந்துகொண்டே இருந்தன. மறுநாள், அவர் இறந்துவிட்டார் என்ற வதந்தி பரப்பப்பட்டது. அதன்பின் பல நாள்கள் அவர் வீட்டிற்குக் காவல்துறை பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இப்போது லியோனி தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அந்தப் புனிதமான பதவியிலிருந்து (அதில் என்ன புனிதம் இருக்கிறது?) அவரை நீக்கிவிட்டு, ஒரு கல்வியாளரை அந்த இடத்தில் நியமிக்க வேண்டும் என்று மருத்துவர்கள் ராமதாஸ், அன்புமணி ஆகியோர் அறிக்கை விடுத்துள்ளனர்.

திண்டுக்கல், செயின்ட் மேரி மேல்நிலைப்பள்ளியில், 1981 முதல் 2011 வரையில், 30 ஆண்டுகள் லியோனி இயற்பியல் (physics) ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். அதனைக் கல்வித் தகுதியாகத் தைலாபுரம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

முன்னாள் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வமும் அவர் நியமனத்தை எதிர்க்கிறார். மேடையில் தரமாகப் பேசுகின்றவர்களை அந்தப் பதவியில் அமர்த்த வேண்டுமாம். ஓ...முன்பு அப்பொறுப்பில் இருந்த முன்னாள் அமைச்சர் வளர்மதி போல மேடையில் தரமாகப் பேச வேண்டும் போலிருக்கிறது.

இந்து முன்னணி, தினமலர் ஏடு ஆகிய இடங்களிலிருந்தும் எதிர்ப்பு வந்துள்ளது. அவர்கள் துக்ளக் ஆசிரியர் குருமூர்த்தி போல மேடையில் தரமாகப் பேசுகின்றவர்களை எதிர்பார்க்கின்றனர் போலும்!

வாழ்த்துகள் தோழர் லியோனி! இவற்றை விடவும் சிறப்பான சான்றிதழ்கள் இனி என்ன வேண்டியிருக்கிறது உங்களுக்கு?

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண்" விடும் நம் முதலமைச்சரைப் பாராட்டியே தீரவேண்டும்! •

# அ.தி.மு.க – பா.ஜ.க கூட்டணி தர்மம்...!?

சிற்பி செல்வராசு

நமது இந்திய ஒன்றியத்தின் தலைமை அமைச்சர் திரு.நரேந்திரமோடி அவர்கள் கடந்த 07.07.2021 அன்று தனது அமைச்சரவையை மாற்றி அமைத்து இருக்கிறார்.

அமைச்சரவையில் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் திரு.எல்.முருகன் ஒன்றிய அரசின் இணை அமைச்சர் ஆக்கப்பட்டுள்ளார். தாராபுரம் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர், சட்டமன்ற உறுப்பினர் கூட ஆக முடியாத ஒருவர் எப்படி ஒன்றிய அரசின் அமைச்சுப் பொறுப்பிற்கு வர முடியும்? நியாயமான கேள்விதான்.

இந்திய ஒன்றிய அரசின் நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் போன்றவர்கள் தேர்தலில் போட்டியிடாமல், மக்களைச் சந்திக்காமல் அமைச்சர்கள் ஆகும் போது; தேர்தலில், மக்களால் புறக்கணிக்கப்பட்ட எல்.முருகனுக்கு மட்டும் அந்த ‘அதிர்ஷ்டம்’ கிடைக்காமலா போகும். வாழ்க ஜனநாயகம் !

தமிழ்நாட்டின் முன்னாள் அ.தி.மு.க.அரசின் சட்டத்துறை அமைச்சராக இருந்த திரு.சி.வி.சண்முகம், கடந்த சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வின் தோல்விக்குக் காரணம் பா.ஜ.வுடன் கூட்டணி வைத்தது தான் என்று சொல்லி விட்டார். இது குறித்து எப்போதும் பேட்டி கொடுக்கும் திரு.ஜெயக்குமார் அது அவரது சொந்தக் கருத்து என்றார்.

ஆனால் பா.ஜ.வின் திரு.கே.டி.ராகவன் இந்தக் கருத்தைச் சொன்ன சி.வி.சண்முகம் மீது அ.தி.மு.க. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். கட்சி விவகாரத்தில் நீங்கள் தலையிட வேண்டாம் என்றார் ஜெயக்குமார்.

உடனே சி.வி.சண்முகம் “நாங்கள் எங்கள் கருத்துகளைச் சொல்வோம்; தலைமை எங்களுக்கு வழிகாட்டும், ஏற்றுக் கொள்வோம்” என்று பதில் சொன்னாலும் பிரச்சனை சிந்துபாத் கதையாகத்தான் நீள்கிறது.

தமிழ்நாட்டில் அ.தி.மு.க வுக்கும், பா.ஜ.கவுக்கும் இருக்கும் கூட்டணி ‘தர்மம்’ இது.

இந்நிலையில் தனது மகனுக்கு அமைச்சரவை மாற்றத்தின் போது ஒன்றிய அமைச்சரவையில் இடம் பிடித்துவிட வேண்டும் என்று கிடையாய் கிடந்தார் திரு.ஓ.பி.எஸ். சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் "ஒன்றிய அரசு" என்று சொன்னதை அவையிலேயே கேட்டாலும் கூட, ஒரு



பத்து நாள்களுக்குப் பிறகு கண்டித்து ஒரு அறிக்கை விட்டார் அவர், பா.ஜ.க. மனம் குளிரும் என்று.

பல கூட்டணிக் கட்சிகளுக்கு அமைச்சர் பதவி கொடுத்த பிரதமர் மோடி, ஓ.பி.எஸ். மகனுக்கு "டாட்டா " காட்டி விட்டார். அது அவர்களின் "கூட்டணி தர்மம்".

இது ஒருபுறமிருக்க ரபேல் ராணுவ விமானங்கள் வாங்கியதில் முறைகேடுகள் நடந்திருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், அந்த விமானங்கள் விற்ற வகையில் லாபம் அடைந்த பிரான்ஸ் அரசே விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கும் நிலையில், ஒன்றிய அரசு கூடுதலான நிதியை இழந்திருப்பதைப் பற்றிப் பிரதமர் பேசுவதில்லை. மாறாக அடுத்து வரவிருக்கும் உ.பி உள்ளிட்ட மாநிலங்களின் தேர்தல்களைக் கணக்கில் வைத்து இந்திய ஒன்றிய அமைச்சரவையில் மாற்றம் செய்ததே மக்களின் சிந்தனைகளை மடை மாற்றித் திசை திருப்புவதற்கானத் தந்திரம்தான்.

புதிய அமைச்சரவையில் பொறுப்பேற்றுள்ள அமைச்சர்களில் ஒருவரான திரு.நாராயண்ராணே என்பவர் 2019இல்தான் பா.ஜ.வில் இணைந்துள்ளார். அதற்கு முன்னர் 2014இல் திரு. அமித்ஷாவால் நாராயண் ராணே மிகப் பெரிய ஊழல் வாதி என்றும், அவர் தண்டிக்கப்பட வேண்டியவர் என்றும் சொல்லப்பட்டவர். இன்று புனிதமாகி விட்டார், பா.ஜ.க அமைச்சராக.

அதே சமயம் ஊழல் வாதிகளும், சட்டவிரோதச் செயல் புரிவோரும் பா.ஜ.வில் சேர்ந்ததும் புனிதப்படுத்தப்பட்டு விடுகிறார்கள் போலும். இதில் அ.தி.மு.கவும் அடக்கம்.

ஓ.பி.எஸ் - ஈ.பி.எஸ் இவர்களுக்கிடையில் எந்தப் "பிரச்சனையும்" இல்லை, கேட்டுப் பாருங்கள் அமித்ஷாவிடம்!

அ.தி.மு.க தலைவர்களுக்கிடையே எந்தப் "பிரச்சனையும்" இல்லை. கேட்டுப்பாருங்கள் சசிகலாவிடம்!

அ.தி.மு.கவுக்கும், பா.ஜ.கவுக்கும் இடையே எந்தப் "பிரச்சனையும்" இல்லை. கேட்டுப் பாருங்கள் கே.டி. ராகவனிடம்!

மோடி மட்டும் பேச மாட்டார், அவரிடம் எதுவும் கேட்டு விடாதீர்கள்.

## இணையமைச்சர் எல்.முருகன்!

இன்று ஒன்றிய அரசின் இணைஅமைச்சர் பொறுப்பில் இருக்கும் திரு.எல்.முருகன், தேசிய தாழ்த்தப்பட்டோர் நல ஆணையத்தின் துணைத்தலைவராக இருந்த போதுதான் மேட்டுப்பாளையத்தில் கட்டப்பட்டிருந்த தீண்டாமைச்சுவர் இடிந்து விழுந்து அருந்ததியர் சமூக மக்களில் 14 பேர்கள் இறந்து போனார்கள். அதிகாரத்தைக் கையில் வைத்திருந்த எல்.முருகன் அந்த மக்களுக்கு எந்த வகையிலாவது நன்மை செய்தாரா என்றால், இல்லை என்பதுதான் பதில். அவர்தான் இன்று இணையமைச்சர்.



# பெட்ரோல் டீசல் எரிவாயு மோடியால் மக்கள் படும்பாடு!

சாரதாதேவி

சென்னையில் இன்றைய பெட்ரோல் விலை ரூ.101.37; டீசல் விலை ரூ.94.15; வீட்டு எரிவாயு விலை ரூ.850.50. வணிக எரிவாயு விலை ரூ.1725.50.

இது ஒன்றரை ஆண்டுகளாக பொது முடக்கத்தால் தொழில் நலிந்து, வருமானம் குறைந்து, நோய்த்தொற்றால் மருத்துவ செலவுகள் கூடி, இறப்புகளைச் சந்தித்து நிற்கும் ஏழை, நடுத்தர மக்களுக்கு மோடி அளித்துள்ள கொரோனா நிவாரணம்.

உலகச் சந்தையில் எரிபொருள்களின் விலை குறைந்து கொண்டே வருகிறது. உலகத்தின் எல்லா நாடுகளும் தம் மக்களுக்கு விலை குறைப்பின் பலனைக் கடத்தி வருகின்றன. ஆனால் நம் ஒன்றிய அரசுக்கு மட்டும் அப்படி ஒரு தொலைதூர சிந்தனை இருப்பதாகக் கூடத் தெரியவில்லை. மாறாக, விலை குறைப்பின் பயனை மட்டுமல்லாது, விலையை ஏற்றி, அதன் பயனையும் மக்களிடமிருந்தே கொள்ளை அடிப்பதில் குறியாக இருக்கிறது மோடியின் ஒன்றிய அரசு.

திறமையற்ற நிர்வாகத்தால், தறிகெட்ட தந்தையால், தாயற்ற ஒரு குடும்பம் படும் பாட்டை இந்த நாட்டு மக்கள் பட்டுக்கொண்டிருக்கிறோம்! ஆம்! வருவாய் ஈட்ட வேறு வழிகள் தேடாமல், ஒரு பக்கம் பெரும் பணக்காரர்களின் கடன்களுக்குத் தள்ளுபடி, வரிச் சலுகை என வாரி வழங்கியும், மறுபக்கம், தங்கள் குற்றங்களை மறைக்க ஊடகம், நீதித்துறை என எல்லா சுதந்திர அமைப்புகளிலும் பதவி, பணம் என வாரி இறைத்தும், இந்துத்துவக் கட்டுமானங்கள், நாடு முழுவதும் சமூகப் பதற்றம், எல்லைகளின் இராணுவப் பதற்றம் என நாட்டின் நிதிச் சுமையை கூட்டிக் கொண்டு போகிறது ஒன்றிய அரசு.

ஒன்றிய அரசின் வெளிக் கடனானது முன்னெப்போதும் இல்லாத அளவு கடந்த 7 ஆண்டுகளில் இரட்டிப்பாகி உள்ளதே திறமையற்ற நிர்வாகத்திற்குச் சான்றாகும்.

## டீசல் விலை:

பொதுவாக டீசல் விலையை முந்தைய அரசு வரை கட்டுப்படுத்தியே வைத்திருந்தார்கள். பெட்ரோல் விலை ரூ.70 களில் இருந்தபோது, டீசல் விலை ரூ.40களில் இருந்தது. ஏறக்குறைய பாதியாக இருந்த டீசல் விலை, இப்போது ஏறக்குறைய பெட்ரோல் விலைக்கு இணையாக வந்து நிற்கிறது. இரட்டிப்பு விலையையும் கடந்து டீசல் விலை ஏறி இருக்கிறது.

வணிக வாகனங்களுக்குப் பெரிதும் பயன்படுத்தப்படுவது டீசல் தான். அதன் விலையேற்றம் என்பது நேரடியாக வணிகப் பொருள்களின் விலை ஏற்றத்திலும் அதுவே எளிய நடுத்தரமக்களின் வாங்கும் சக்தியின் மீதான தாக்குதலாகவே போய் முடியும். ரூ.100/- விற்ற ஒரு லிட்டர் சமையல் எண்ணெய் இப்போது ரூ.200/-. ரூ.20/-க்கு விற்ற சோப்பு விலை இப்போது ரூ.40/-. டீசல் விலை ஏற்றத்தின் நேரடி விளைவுகள் இப்படி உள்ளன. இதில் மருந்தில்லா இயற்கை, ஆரோக்ய மளிகைப் பொருள்களின் விலை இதைக் காட்டிலும் இரட்டிப்பு விலை. மக்கள் பசியாறவே இயலாத சூழலில், ஆரோக்ய உணவுகள் அவர்களின் கற்பனைக்கு மட்டுமே சாத்தியமாக்கிக் கும்மியடிக்கிறது மோடியின் அரசு.






மாநில அரசுகள் எவ்வளவு முயன்றாலும் இந்த விலை ஏற்றத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற இயலாது. ஒன்றிய அரசு எரிபொருள்களின் மீதான வரியைக் குறைக்காமல், மாநில அரசு மட்டும் ஒன்றும் செய்ய இயலாத கையறு நிலையே நீடிக்கும். அதனால்தான் நம் தமிழ்நாட்டு நிதி அமைச்சர் கூட பெட்ரோல், டீசல் மீது முதலமைச்சர் அறிவித்த வரிச் சலுகையை இப்போதைக்கு நடைமுறைப்படுத்தினாலும் பயன் இல்லை என்றார். ஒன்றிய அரசு அந்த வரியையும் தனக்கே கிடைக்கும்படி மீண்டும் ஏற்றிவிடும் அபாயம் உள்ளது.

## எரிவாயு

சமையல் எரிவாயு ரூ.350/-க்கு மானியத்துடன் விற்கப்பட்டு வந்தது. மானியம் சுமார் ரூ.230/- ஐ வங்கியில் செலுத்துகிறோம் என்று ஒரு மாயையை உருவாக்கிய ஒன்றிய அரசு, கொஞ்சம் கொஞ்சமாக மானியத்தைக் குறைத்து இப்போது ரூ.20/-க்கும் குறைவாக வங்கியில் செலுத்துகிறது. மறுபக்கம் எரிவாயுவின் விலையை உருளைக்கு ரூ.250/- ஏற்றிவிட்டது. ஒவ்வொரு குடும்பமும் இதனால் ரூ.500/- ஒவ்வொரு உருளைக்கும் அதிகமாக செலவு செய்ய வேண்டியுள்ளது. எனக்குத் தெரிந்தே பல நடுத்தரக் குடும்பங்களில் விறகடுப்பை மீண்டும் உயிர்ப்பித்து உள்ளார்கள். ஏழை எளிய குடும்பங்கள் என்ன செய்வார்கள்? விறகு அடுப்பால் ஏற்படப்போகும் சுற்றுச் சூழல் பாதிப்புகளை இந்த அரசு கவனத்தில் கூட எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

ஆடம்பர, மிகை, அலங்காரச் செலவுகளுக்கு அல்லாமல் அன்றாட உயிர் வாழ்தலுக்கே மாதந்தோறும் கடும் உழைப்பைச் செலுத்தும் எளிய குடும்பங்களின் செலவு இரட்டிப்பாகிப் போயிருக்கிறது. வருமானம் குறைந்து போயிருக்கிறது. நாங்கள் வாழவேண்டுமா? இல்லை, முடித்துக் கொள்ளலாமா? பல குடும்பங்கள் விடைகளை எதிர்மறையாகச் சொல்லிச் சென்றுவிட்டார்கள்.

மோடியின் தலைமை எனும் தவறான பாதையை நாம் கட்டாயம் மாற்றி ஆகவேண்டும். அதற்கான எல்லா வாய்ப்புகளையும் நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். தவறிவிட்டால், நம் வாழ்வாதாரங்களின் மீதான இந்தப் போரை நாம் வெல்லவே முடியாது! நம் மக்களில் பலரின் இழப்பை நம்மால் தடுக்கவும் இயலாது!

●

# தொடரும் வஞ்சக வரலாறு...

மா.உதயகுமார்

2017 முதல் 2020 வரையிலான மூன்று ஆண்டுகளில் ஒன்றிய அரசு சமஸ்கிருதத்தின் வளர்ச்சிக்காக மட்டும் ரூ.683.84 கோடி செலவிட்டுள்ளது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் ஒடியா ஆகிய மற்ற செம்மொழிகளின் வளர்ச்சிக்கு மொத்தமாக ரூ.29 கோடி செலவிட்டுள்ளது. இந்தப் புள்ளி விவரம் அரசாலேயே வெளியிடப்பட்டிருக்கிறது.

இது நம் கண் முன் தெரிகிற கணக்கு. ஆனால் கண்ணுக்குத் தெரியாத கணக்கிற்கு அளவே இல்லை. இது புதிய வழக்கமும் அல்ல. வரலாற்றுக் காலந்தொட்டு யார் ஆட்சியில் இருந்தாலும் சமஸ்கிருத வளர்ச்சியும், அதன்மூலம் பார்ப்பனர்கள் வளர்ச்சியுமே வழக்கமான ஒன்றாக இருக்கிறது.



நன்றி: வே.மதிமாறன் இணையதளம்

அரசர்கள் காலத்தில் இவர்கள் வேத பாடசாலைகளுக்குப் பெற்ற தானங்களும், நிலங்களும் செல்வமும் கல்வெட்டுகளில் காணக்கிடைக்கின்றன. கிடைத்திருக்கும் கல்வெட்டுகளில் சொல்லப்படும் கணக்கே மலைப்பைத் தருகிறதென்றால், கிடைக்கப்பெறாத கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கணக்கின்றி கொடுக்கப்பட்ட தானங்களும் எவ்வளவு இருக்கும் என்று எண்ணிப் பார்க்கவே கடினமாக இருக்கிறது.

முகலாயர் ஆட்சி ஆகட்டும், ஆங்கிலேயர் ஆட்சி ஆகட்டும் பார்ப்பனர்கள் காட்டில் மழைதான். அன்றாவது அரசர்களிடமிருந்தோ, செல்வந்தர்களிடமிருந்தோ தானமோ, தர்மமோ பெற வேண்டிய நிலை இருந்தது. அது அவர்களுக்குக் கை வந்த கலை என்றாலும், இன்னொருவர் கையைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருந்தது. ஆனால், இன்று அவர்களே ஆட்சி அதிகாரங்களை நேரடியாகத் தங்கள் கைகளில் வைத்திருக்கிறார்கள். இனி அவர்களுக்கு ஏன் மற்றவர்கள் தானமும் தர்மமும் கொடுக்க வேண்டும்?

இது கடவுளின் பெயரால், தேவ பாஷை என்னும் மாய பிம்பம் உருவாக்கப்பட்டுத் தொடரும் கொள்ளையாகும். இதில் மக்களின் பணம் கொள்ளையடிக்கப்படுவது மட்டுமன்று, சுரண்டப்பட்ட மக்கள் இழிவுக்கும் உள்ளாகின்றனர். மக்கள் மொழி நீச பாஷையாக இருக்கிறது. தங்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டே தங்கள் மொழியையே இழிவுபடுத்தும் அவலநிலை உலகில் எந்த சமூகத்திலும் காணப்பெறாதது.

தமிழுக்காக மட்டுமல்ல, இந்திய ஒன்றியத்தின் அனைத்து மொழிகளின் உரிமைகளுக்காகவும் திராவிட இயக்கம்தான் தொடர்ந்து மொழிப்போர்களை நடத்தி வருகிறது. திராவிடமே, நீச பாஷைகள் ஆக்கப்பட்ட மொழிகளுக்கு இருக்கும் ஒரே சுடரொளி!

●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## சிறையில் மறைந்த ஸ்டான் சாமி

ஸ்டான் சாமி என்று அழைக்கப்பட்ட இவரின் இயர்பெயர் ஸ்டானிஸ்லாய் லூர்துசாமி. இன்றைய அரியலூர் மாவட்டம், விரகனூர் கிராமத்தில் பிறந்த இவர், பிலிப்பைன்ஸில் இறையியல், சமூகவியல் படிப்பைப் படித்தவர்.

சிறந்த சமூக செயல்பாட்டாளரான இவர் மிகவும் பின்தங்கிய மாநிலமான ஜார்கண்டில், பழங்குடியின மக்களோடு வாழ்ந்து அவர்களின் சமூக வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டவர். சிறந்த எழுத்தாளர், சில நூல்கள் எழுதியிருக்கிறார்.



மராட்டிய பீஷ்வாக்களை எதிர்த்து ஆங்கிலப்படையுடன் தலித்துகள் ஒன்றிணைந்து போராடிய இடம் பீமாகொரேகான். அந்த இடத்திற்கு டாக்டர் அம்பேத்கர் சென்று அஞ்சலி செலுத்தியதில் 100ஆம் ஆண்டு விழாவை 2007ஆம் ஆண்டு ‘எல்கார் பரிஷத்’ என்று மக்கள் கொண்டாடினார்கள்.

அதற்கு அடுத்த 2008ஆம் ஆண்டு அந்த விழாவோடு மாவோயிஸ்டுகளுக்கு தொடர்பு இருக்கிறது என்று குற்றம் சாட்டி, ‘உபா’(UAPA) சட்டத்தைப் பயன்படுத்தி சமூக செயல்பாட்டாளர்களான சுதிர், தவாலே, மகேஸ்ராவத், சோமாசென் உள்ளிட்டவர்களைக் கைது செய்தது அரசு.

2019ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இதே குற்றச்சாட்டை முன்வைத்து ஆனந்த் டெல்டும்பே கைது செய்யப்பட்டார். 2020ஆம் ஆண்டு மே மாதம் ராஞ்சியில் கைது செய்யப்பட்டார் ஸ்டான் சாமி.

அவர் கைது செய்யப்படும்போது அவருக்கு வயது 83. அவருக்கு பர்கின்ஸ் என்ற நடுக்க நோய் இருந்தது. அதனால் அவரால் கையால் உணவு சாப்பிட முடியாது. மாற்று ஏற்பாட்டை சிறைத்துறை செய்து தரவில்லை.

நோய் மற்றும் வயது முதிர்வு காரணமாக அவருக்குப் பிணை மறுக்கப்பட்ட நிலையில் 2021 ஜூலை 5ஆம் தேதி அவர் சிறையிலேயே மரணமடைந்தார்.

ஒரு நேர்மையான மக்கள் தொண்டருக்கு இந்த அரசு கொடுக்கும் மரியாதை இதுதான் என்பது கண்டனத்திற்குரியது.

வரலாறு இவரைப் பதிவு செய்கிறது.